**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம், சங்கரன்கோவில்**
**(சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்)**

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்**

**2026-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 18-ஆம் நாள் வியாழக் கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 04-ஆம் நாள்)**

**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை அசல் மனு எண்.42/2022**

(CNR No.TNTS07-000463-2022)

செ. முத்துலட்சுமி ...மனுதாரர்

1. த.வனராஜ்
2. முகமது ஆதம் . . . எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது கடந்த 07.01.2026 தேதியன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.வி.கிளாஸ்டின் மற்றும் மு.முகேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர். எம்.சண்முகராஜ் அவர்கள் ஆஜராகியும், 2 எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், மேற்படியாரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால், மேற்படியார் தோன்றா தரப்பினராக வைக்கப்பட்டும், மனுதாரர் வாதத்தை கேட்டும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எழுத்துமூலமான வாதுரையை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உ த் த ர வு

விபத்தினால் மனுதாரர் முத்துலெட்சுமிக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து ரூ.24,00,000/-மும், அத்தொகைக்கு பின்வட்டியும் மற்றும் வழக்கு செலவுத்தொகையும் கோரி மனுதாரர்களால் இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை சட்டம் பிரிவு 166 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்:**

மனுதாரரும், சபாபதி நகரை சார்ந்த மாடசாமி மனைவி பேச்சியம்மாள், அய்யனார் மனைவி கோமதி, தங்கவேல் மனைவி பிச்சம்மாள் ஆகியோர் 1ம் எதிர்மனுதாரரின் TN 65 C4682 என்ற எண் கொண்ட டிராக்டருடனான டிரெய்லரில் செங்கல் ஏற்றிக்கொண்டு 22.12.2021 ஆம் தேதி மதியம் 2 1/2 மணியளவில் தளவாய்புரம் மெயின்ரோட்டில் உள்ள சுப்பையா மனைவி லட்சுமி என்பவரின் வீட்டிற்கு முன்பு வந்து, டிராக்டரில் செங்கலை இறக்குவதற்காக மனுதாரரும், அவருடன் வந்தோரும் கீழே இறங்கியுள்ளனர். மனுதாரர் லட்சுமி அம்மாள் வீட்டு மாடிக்கு செல்லும் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தபோது 1ம் எதிர்மனுதாரர் திடீரென ஹாரன் அடிக்காமல் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து படிக்கட்டில் உட்கார்ந்திருந்த மனுதாரர் மீது இடித்ததில் மனுதாரரின் இடதுபக்க இடுப்பு மற்றும் வலது பக்க இடுப்பு ஆகிய பகுதியில் வீக்க காயம் ஏற்பட்டது. மேலும் மனுதாரர் விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்காக சங்கரன்கோவில் மருத்துவமனையிலும் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றார். மேற்படி விபத்து குறித்து சின்னக்கோவிலான்குளம் காவல்நிலையத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரரின் மீது முதல் தகவல் அறிக்கை எண்.238/2021, இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் 1ம் எதிர்மனுதாரர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

2.2. மனுதாரர் விபத்திற்கு முன்பு செங்கல் ஏற்றி இறக்கும் கூலித்தொழில் செய்வதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/-ம் வரை செலவினங்கள் போக சம்பாதித்து வந்தார். விபத்திற்கு பின்பு முன்பு பார்த்ததுபோல் வருமானம் ஈட்ட முடியவில்லை. எனவே, எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் மனுதாருக்கு இழப்பீடாக ரூ.24,00,000/- கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். எனவே, எதிர்மனுதார்களிடமிருந்து ரூ.24,00,000/- இழப்பீடு கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **2 ஆம் எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம்**:

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் தவறானது. 1 ஆம் எதிர்மனுதாரர் கடந்த 22.12.2021 ஆம் தேதியில் தான் ஓட்டி வந்த டிராக்டரில் மனுதாரர் உள்ளிட்ட நபர்களை ஏற்றிக்கொண்டு செங்கல் இறக்குவதற்காக தளவாய்புரம் மெயின்ரோட்டிலுள்ள லட்சுமி என்பவரின் வீட்டின் அருகில் டிராக்டரை நிறுத்திவிட்டு டிராக்டரில் இருந்த மனுதாரர் உள்ளிட்ட நபர்களை இறக்கிவிட்டார். அவ்விதம் இறங்கிய மனுதாரர் உள்ளிட்ட நபர்கள் செங்கல்களை இறக்கி முடித்ததும், மனுதாரர் அருகிலுள்ள வீட்டின் மாடிப்பகுதிக்கு செல்லும் படிக்கட்டில் அமர்ந்திருந்தார். அதுசமயம் 1ம் எதிர்மனுதாரர் டிராக்டரை ஒதுக்குபுறமாக நிறுத்துவதற்காக ஸ்டார்ட் செய்து மிக கவனமாகவும், ஜாக்கிரதையாகவும், பின்புறமாக டிராக்டரை எடுத்தபோது மனுதாரர் தன் மீதுதான் டிராக்டர் மோத வருகிறது என கருதி பதறியபடி வீட்டில் அருகிலிருந்த வாறுகாலில் விழுந்துவிட்டார். மனுதாரருக்கு வாகன விபத்தினால் காயங்கள் ஏற்படவில்லை. எனவே மேற்கண்ட விபத்திற்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. மனுதாரர் உண்மையில் நடந்த சம்பவத்தை மறைத்து தான் இழப்பீடு பெற வேண்டுமென்பதற்காக 1ம் எதிர்மனுதாரர் மீதும் அவர் ஓட்டி வந்த வாகனத்தின் மீதும் மோசடியாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் செங்கல் ஏற்றி இறக்கும் கூலி வேலை மட்டுமே பார்த்து வருகிறார். அதன் மூலம் மனுதாரருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/- கிடைக்கக்கூடியதாகும். அதுபோல் மனுதாரர்

விவசாய வேலைகள் ஏதும் செய்து வரவும் இல்லை. மனுதாரர் கூறியுள்ள குற்ற வழக்கில் காவல்துறையினர் 1ம் எதிர்மனுதாரரை மிரட்டி வாக்குமூலம் பெற்றுக்கொண்டதுடன் நீதிமன்றத்தில் சிறிய அபராதத் தொகை மட்டுமே விதிக்கப்படும். அதனை மறுத்தால் 1ம் எதிர்மனுதாரர் மீது பல பொய்யான வழக்குகள் வேண்டுமென்றே பதிவு செய்யப்படும் என மிரட்டி, 1ம் எதிர்மனுதாரரை குற்ற வழக்கை ஒப்புக்கொள்ள செய்துள்ளனர். அதனடிப்படையில் 1ம் எதிர்மனுதாரரும் குற்ற வழக்கை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியுள்ளார். ஆனால் நடந்த சம்பவத்திற்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. மனுதாரரின் அஜாக்கிரதையாலேயே மேற்படி காயங்கள் ஏற்பட்டுள்ளது. வாகன விபத்தினால் மனுதாரருக்கு எந்த காயங்களும் ஏற்படவில்லை. எனவே மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடுகளையும் வழங்க கடமைப்பட்டவர் இல்லை. எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. மனுதாரின் மனுவுரை, 1ஆம் எதிர்மனுதாரின் எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்த இத்தீர்ப்பாயம், இம்மனுவின் தீர்வுக் காக கீழ்க்கண்ட பிரச்சினைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளது:

**ஆய்வுக்குரிய பிரச்சினைகள்:**

1. விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு காரணம்? விபத்திற்கு மனுதாரரின் பங்கேற்பு கவனக்குறைவு உள்ளதா?
2. மனுதாருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் அதை வழங்க பொறுப்புடையவர் யார்?
3. மனுதாருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டு தொகை எவ்வளவு?
4. மனுதாருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் முத்துலட்சுமி என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ஷையார் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1ம் எதிர்மனுதார் தரப்பில், யாதொரு வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இரு தரப்பு வாதங்கள் கூர்ந்து கேட்கப்பட்டன. சாட்சிய, சான்றாவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

6. **பிரச்சினை எண்.1-க்கான தீர்வு:**

மனுதார் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட ம.சா.1 தனது சாட்சியத்தில், 1ம் எதிர்மனுதாரரின் TN 65 C4682 என்ற எண் கொண்ட டிராக்டருடனான டிரெய்லரில் செங்கல் ஏற்றிக்கொண்டு 22.12.2021 ஆம் தேதி மதியம் 2 1/2 மணியளவில் தளவாய்புரம் மெயின்ரோட்டில் உள்ள சுப்பையா மனைவி லட்சுமி என்பவரின் வீட்டிற்கு முன்பு வந்து, டிராக்டரில் செங்கலை இறக்குவதற்காக மனுதாரர் இறங்கி லட்சுமி அம்மாள் வீட்டு மாடிக்கு செல்லும் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தபோது TN 65 C4682 என்ற எண் கொண்ட டிராக்டரை அதன் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் திடீரென ஹாரன் அடிக்காமல் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து படிக்கட்டில் உட்கார்ந்திருந்த மனுதாரர் மீது இடித்ததில் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது.

6.2. மேலும், மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் ம.சா.ஆ.1 ஆவணத்தினை பரிசீலனை செய்கையில், 2 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 65 C 4682 என்ற எண்ணிலுள்ள டிராக்டருடன் கூடிய டிரெய்லரை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து படிக்கட்டில் உட்கார்ந்திருந்த மனுதாரர் மீது மோதி விபத்து

ஏற்படுத்தியதாக சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

6.3. மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம், 1ஆம் எதிர்மனுதாரர் TN 65 C 4682 என்ற எண்ணிலுள்ள டிராக்டருடன் கூடிய டிரெய்லரை கவனக்குறைவாக ஓட்டி வந்ததால் விபத்து நடந்துள்ளது என்பது நிரூபணமாகிறது.

6.4. இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் டிராக்டரை ஒதுக்குபுறமாக நிறுத்துவதற்காக மிக கவனமாகவும், ஜாக்கிரதையாகவும், பின்புறமாக டிராக்டரை எடுத்தபோது மனுதாரர் தன் மீதுதான் டிராக்டர் மோத வருகிறது என கருதி பதறியபடி வீட்டில் அருகிலிருந்த வாறுகாலில் விழுந்துவிட்டார் என்று சொல்லப்பட்டுள்ள போதிலும் மேற்படி சங்கதியை நிரூபிக்கும் வகையில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் நிரூபிக்கப்படவில்லை என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

6.5. எனவே, மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து, வழக்கு விபத்தானது, 1ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவின் காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளது என இவ்வாயம் முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

7. **பிரச்சினை எண்.2-க்கான தீர்வு**:

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமான ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு மற்றும் ம.சா.ஆ.3 காயச்சான்றிதழ் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில்,

மனுதாரருக்கு விபத்தின் காரணமாக கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பதும், ம.சா.ஆ.9 ஸ்கேன் மற்றும் ம.சா.ஆ.10 சிகிச்சை விபர அறிக்கையை பரிசீலனை செய்ததில், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், சங்கரன்கோவில் எஸ்.எம்.ஆர் ஸ்கேன் செண்டரிலும் ஸ்கேன் எடுக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும் தெரியவருகிறது. எனவே, வழக்கு விபத்தினால் மனுதாரருக்கு காயம் ஏற்பட்டுள்ளதால் மேற்படி காயங்களுக்காக மனுதாருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

8. மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், ஷை இழப்பீட்டை யார் வழங்க பொறுப்புடையவர் என்பது குறித்து பரிசீலனை செய்கையில், ஏற்கனவே, இவ்வாயம் மேலே பிரச்சினை எண்.1ல், இந்த விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரான 1ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவினால்தான் நடைபெற்றது என்பதாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், வாகன உரிமையாளரான 2 ஆம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்காக மனுதாரருக்கு உரிய இழப்பீட்டை வழங்கக் கடமைப்பட்டவர் ஆவார். மேலும் ம.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலனை செய்கையில் விபத்து சமயத்தில் மேற்படி டிராக்டரின் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்பதையும், விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்பதும் தெரியவருகிறது.

9. எனவே, மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து மனுதாருக்கு கிடைக்கத்தக்கதாக உள்ள இழப்பீட்டுத் தொகையை, ஷை விபத்திற்குள்ளான வாகனத்தின் உரிமையாளரான, 2 ஆம் எதிர்மனுதாரர் வழங்கக் கடமைப்பட்டவர் என முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

10. **<u>பிரச்சினை எண்.3-க்கான தீர்வு</u>:**

**<u>பகுதி நிரந்தர ஊனத்திற்காக</u>:**

10.1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களான ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு, ம.சா.ஆ.3 காயச்சான்றிதழ், ம.சா.ஆ.9 ஸ்கேன், ம.சா.ஆ.10 சி.டி ஸ்கேன் ஆகிய ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இருந்து, மனுதாரருக்கு விபத்தின் காரணமாக கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளன என்பதும், அக்காயத்திற்கு மனுதார் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும் தெளிவாகிறது. மேலும், நீ.ம.சா.ஆ.1, மாவட்ட மருத்துவக் குழு வழங்கிய இயலாமைச் சான்றிதழ் மூலம் மனுதாரருக்கு விபத்தின் காரணமாக 40 சதவீதம் பகுதி நிரந்தர ஊனம் (Partially Permanent in nature) ஏற்பட்டுள்ளது எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. விபத்தானது கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள 40 சதவீத ஊனத்திற்கு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், M.Atchaya Vs T. Gnanamani on 24 June, 2025 என்ற முன்வழக்கு தீர்ப்பில் வழங்கப்பட்ட வழிமுறைகளை பின்பற்றி ஒரு சதவீத ஊனத்திற்கு ரூ.9,000/- (ரூபாய் ஒன்பதாயிரம்) வீதம், மனுதாாரின் 40% ஊனத்திற்கு ரூ.3,60,000/- (9,000 X 40= 3,60,000) (ரூபாய் மூன்று லட்சத்து அறுபதாயிரம்) பெற மனுதாரர் உரிமை உடையவர் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>வலி மற்றும் வேதனைக்காக</u>:**

10.2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களான ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு, ம.சா.ஆ.3 காயச்சான்றிதழ், ம.சா.ஆ.9 ஸ்கேன், ம.சா.ஆ.10 சி.டி ஸ்கேன் ஆகிய ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இருந்து, மனுதாரருக்கு விபத்தின் காரணமாக இடது பக்க இடுப்பு மற்றும் வலதுபக்க இடுப்பு ஆகிய பகுதியில் வீக்க காயமான கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதும், அக்காயத்திற்கு மனுதார் உள்நோயாளியாக சிகிச்சைகள் மேற்கொண்டுள்ளார் என்பதும் தெளிவாகிறது. மனுதாரர் எடுத்துள்ள தொடர் சிகிக்சையில் இருந்தும், அவருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள மருத்துவ சிகிச்சைகளிலிருந்தும், மனுதாருக்கு

விபத்தினால் ஏற்பட்ட காயங்களின் தன்மையை அறிய முடிகிறது. மேலும், மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்தை கருத்திற்கொண்டும், மனுதாரர் விபத்தினால் உள் மற்றும் வெளிநோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்பதைக் கருத்திற்கொண்டும், விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்கு ரூ.40,000/- (ரூபாய் நாற்பதாயிரம்) வழங்கினால் நியாயமான இழப்பீடாக இருக்கும் என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

**<u>சிகிச்சையின்போது ஏற்பட்ட வருமான இழப்புக்காக:</u>**

10.3. மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களின் காரணமாக மனுதாரருக்கு சிகிச்சை மேற்கொண்டதன் காரணமாக குறைந்தது 2 மாதமாக பணிக்கு சென்றிருக்க முடியாது என்பதை அறியமுடிகிறது. மேலும் மனுதாரர் விபத்திற்கு முன்பு மனுதார் நன்கு திடகாத்திரமாக இருந்து, செங்கல் ஏற்றி இறக்கும் கூலித்தொழில் செய்வதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வரை சம்பாதித்து வந்ததாக கூறியுள்ளனர். மேலும், தோராய மாத வருமானம் நிர்ணயம் செய்வது சம்பந்தமாக, மாண்புமிகு உச்ச நீதிமன்றம், *Syed Sadiq and others //Vs// Divisional Manager United India Insurance Co., ltd., 2014 2 SCC 735* என்ற வழக்கில், 2008-ம் வருடம் காய்கறி விற்கும் ஒரு நபரின் மாத வருமானம் ரூ.6,500/- (ரூபாய் ஆறாயிரத்து ஐநூறு) என்று தீர்மானித்துள்ளது. மேலும், *Andal and others /Vs/ Avinav Kannan and others – 2019 (1) TN MAC 54 (DB)* என்ற முன்வழக்கில், விலைவாசி உயர்வு புள்ளியியல் அடிப்படையில் (Cost of inflation index) 2014 ஆம் ஆண்டு மாத வருமானம் ரூ.11,085/- என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி முன்தீர்ப்புக்களின் அடிப்படையில், மனுதாரருக்கு தோராய மாத வருமானத்தை நிர்ணயிக்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே, மனுதாரருக்கு கடந்த 2021 ஆம் ஆண்டு விபத்து ஏற்பட்டுள்ளதன் காரணமாக, மேற்படி முன் தீர்ப்பில் 2008 ஆம் ஆண்டு Cost of inflation index 301 என இருந்துள்ளதன் அடிப்படையில், மாத வருமானம் ரூ.6,500/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், 2021 ஆம் ஆண்டு மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டுள்ளதால் 2021 ஆம்

ஆண்டு விலைவாசி உயர்வு பட்டியல் 301 என்பதால் மேற்படியாரின் மாத வருமானம் ரூ.6,500 x 301/129 = ரூ.15,166/- வருகிறது. மேற்படி தொகையை ரூ.15,000/-ஆக எடுத்துக்கொள்ளலாம் என இவ்வாயம் கருதுகிறது. எனவே மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது போல மாத வருமானம் ரூ.15,000/-ம் என நிர்ணயம் செய்யப்படுகிறது. எனவே, மனுதாரருக்கு 2 மாதங்களுக்கான வருமான இழப்பாக, மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வீதம், மொத்தம் 2 மாதங்களுக்கு ரூ.30,000/- கிடைக்கத்தக்கது என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

**<u>சிகிச்சையின்போது உடனிருந்து கவனித்தவரின் வருமான இழப்புக்காக</u>:**

10.4 வழக்கு விபத்தில் காயமடைந்த மனுதாரை, மருத்துவ சிகிச்சையின்போதும், அதன்பின்பு வெளிநோயாளியாக இருந்தபோதும் உடனிருந்து கவனித்துக் கொள்ள தனியாக ஒரு நபர் தேவைப்பட்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ ஆவணங்களின் பரிசீலனையிலிருந்து, மனுதாரரை குறைந்தது ஒரு மாதமாவது யாராவது ஒருநபர் உடனிருந்து கவனிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும் என்பதை இவ்வாயம் கருத்திற்கொள்கிறது. எனவே, மனுதாரரை உடன் இருந்து கவனித்து கொண்டவரின் வருமான இழப்பாக ஒரு மாதத்திற்கு ரூ.5,000/- ம் பெற மனுதாரர் உரிமையுடையவர் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>போக்குவரத்து செலவுக்காக</u>:**

10.5 மேலும், மனுதார் தரப்பில் போக்குவரத்து செலவுக்கான ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யப்படாதபோதிலும், மனுதார் மருத்துவ சிகிச்சைக்காக பலதரப்பட்ட மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சைகள் மேற்கொண்டுள்ள விபரங்கள், மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களிலிருந்து துலங்குகிற நிலையில், ரூ.2,000/- மட்டும் போக்குவரத்து செலவிற்காக மனுதாருக்கு கிடைக்கத்தக்கது என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

**<u>ஊட்டச்சத்துக்காக</u>:**

10.6. மேலும் மனுதாரருக்கு ஊட்டசத்து உணவிற்காக மனுதாரர் ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம்) பெற உரிமையுடையவர் என்று இவ்வாயம் தீர்மானிக்கிறது.

**<u>மருத்துவ செலவுக்காக</u>:**

10.7. மனுதாரர் தரப்பில் மருத்துவ செலவுக்காக ரூ.50,000/-ம் செலுத்தியதாக தனது மனுவில் சொல்லப்பட்டுள்ள போதிலும் மருத்துவ செலவு செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மருத்துவ செலவுக்கான தலைப்பின் கீழ் மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என இவ்வாயம் தீர்மானிக்கிறது. மேற்கண்ட வகையில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீடு தொகை பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்படுகிறது.

| வ.எண் | இழப்பீடு தலைப்புகளில் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 40% பகுதி நிரந்தர ஊனத்திற்காக (40 X 9,000) | ரூ.3,60,000 |
| 2 | வலி மற்றும் வேதனைக்காக | ரூ. 40,000 |
| 3. | மாத வருமான இழப்புக்காக | ரூ. 30,000 |
| 4 | உடனிருந்தவர் செலவுக்காக | ரூ. 5,000 |
| 5 | போக்குவரத்து செலவுக்காக | ரூ. 2,000 |
| 6 | ஊட்டசத்து உணவிற்காக | ரூ. 20,000 |
| 7 | மருத்துவ செலவுக்காக | --- |
| | மொத்தம் | ரூ.4,57,000/- |

10.8. எனவே, மேலே சொல்லப்பட்ட காரணங்களின் அடிப்படையில், மனுதாரர், ரூ.4,57,000/- இழப்பீட்டு தொகையை 2 ஆம் எதிர்மனுதாரிடமிருந்து பெற உரிமை உடையவர் என பிரச்சினை எண்.3-க்கு மேற்சொன்னவாறு தீர்வு காணப்படுகிறது.

11. **<u>பிரச்சினை எண்.4-க்கான தீர்வு</u>:**

மனுதாருக்கு இழப்பீடாக ரூ.4,57,000/- 2 ஆம் எதிர்மனுதாரிடமிருந்து கிடைக்கத்தக்கது என்று மேலே இவ்வாயம் முடிவு செய்துள்ள நிலையில், ஷை தொகைக்கு மனுதாருக்கு வட்டியும், இவ்வழக்கு செலவுத்தொகையும் கிடைக்கத்தக்கது என்று தீர்மானித்து, அவ்வாறே இத்தீர்ப்பாயம் பிரச்சினை எண்.4-க்கு மேற்சொன்னவாறு தீர்வு காண்கிறது.

12. (i) இறுதியாக, இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

(ii) 2 ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.4,57,000/-- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பத்தி ஏழாயிரம் ஒன்று ) அதற்குரிய வட்டியுடன் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

(iii) மேற்படி இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரையிலும் ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து 2 ஆம் எதிர்மனுதாரர் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில், அதாவது, Indian Bank, Sankarankovil Branch in A/c <u>No:6455813233, IFSC Code: IDIB000S008</u> மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

(iv) மேற்படி இழப்பீட்டு தொகை மற்றும் அதற்கான வட்டி மற்றும் மனுச் செலவுத்தொகை ஆகிய அனைத்தையும் மனுதாரர் இவ்வாயத்தில் தொகை செலுத்தப்பட்டவுடன் உடனடியாக பெற்றுக்கொள்ளலாமென்று உத்தரவிடப்படுகிறது.

(v) மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணத்தை இவ்வாயத்தில் செலுத்த மனுதாருக்கு 10 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 18 -ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P
Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.06.18 20:39:18 -0600

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை
தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்**:

ம.சா.1 திருமதி.முத்துலட்சுமி (மனுதாரர்)

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**: **இல்லை**

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**:

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 23.12.2021 | முதல் தகவல் அறிக்கை கணினி பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.2 | 22.12.2021 | விபத்து பதிவேடு கணினி பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.3 | ---- | காயச்சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.4 | 23.12.2021 | மாதிரிவரைபடம் கணினி பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.5 | --- | பார்வை மகஜர் கணினி பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.6 | ---- | TN 65 C 4682 TAFE டிராக்டர் வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை கணினி பதிவிறக்கம் நகல் |
| ம.சா.ஆ.7 | ----- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.8 | | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் ஒளிநகல் |
| ம.சா.ஆ.9 | 05.11.2024 | சங்கரன்கோவில் எஸ்.எம்.ஆர் ஸ்கேனில் எடுக்கப்பட்ட ஸ்கேன் அறிக்கை அசல் |
| ம.சா.ஆ.10 | | திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சை விபர அசல் |

**எதிர்மனுதார்கள் தரப்பு சான்றாவணங்கள்**: **இல்லை**

**நீதிமன்ற சான்றாவணங்கள்**:

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ 1 | -- | மனுதாரரின் இயலாமை சான்று |

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.06.18 20:39:26 -0600

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை
தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்.

**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டு**
**கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்)**
**சங்கரன்கோவில்**

**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டு**
**கோருரிமை அசல் மனு எண்.42/2022**

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள் 18.06.2026**